## வகுப்பு - 7, 8 - வேதியியல்,
## 3, 10 - நம்மைச் சுற்றி நிகழும் மாற்றங்கள்

71. பின்வருவனவற்றுள் வெப்பக்கொள் மாற்றங்கள் எவை?

(1) குளிர்தல், உருகுதல் (2) குளிர்தல், உறைதல்

(3) ஆவியாதல், உருகுதல் (4) ஆவியாதல், உறைதல்

72. பின்வரும் காலங்களில் தாவரங்களில் ஒளிச்சேர்க்கை அதிகளவு நடைபெறுவது எப்போது?

(1) காலை 6 மணி முதல் 7 மணி வரை. (2) காலை 7 மணி முதல் 8 மணி வரை.

(3) காலை 10 மணி முதல் 11 மணி வரை (4) மாலை 6 மணி முதல் 7 மணி வரை.

73. தீக்குச்சி கோடைக் காலங்களில் உடனடியாக எரிவதிலிருந்து சில வேதிவினைகள் நடைபெற ______ அவசியம் என்பதை அறியலாம்.

(1) ஒளி ஆற்றல் (2) வேதி ஆற்றல் (3) வெப்ப ஆற்றல் (4) வினைவேகமாற்றி

74. ஒரு பொருளின் இயைபில் மாற்றம் ஏற்பட்டால் அது ______ மாற்றமாகும்.

(1) இயற்பியல், மீள் (2) வேதி, மீள் (3) இயற்பியல், மீளா (4) வேதி, மீளா

75. A என்ற பொருளானது B என்ற புதிய பொருளாக மாற்றமடைந்துள்ளது. ஆனால் நிலை மாறவில்லை. இக்கருத்தினைக் கொண்டு பின்வரும் மாற்றங்களுள், A ஆனது, எம்மாற்றமடைந்துள்ளது?

(1) மெதுவான (2) வேகமான (3) வேதி (4) கால ஒழுங்கற்ற

76. கூற்று 1: அனைத்து நிற மாற்றங்களும் வேதி மாற்றமடைந்துள்ளதை உணர்த்தும்.

கூற்று 2: அனைத்து இயைபு மாற்றங்களும் வேதி மாற்றமடைந்துள்ளதை உணர்த்தும்.

(1) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி (2) கூற்று 1 சரி, 2 தவறு.

(3) கூற்று 1,2 சரி (4) கூற்று 1,2 தவறு.

77. ஒரு பொருளின் வடிவம், அளவு, நிறம் இவற்றில் மாறுபாடு அடைந்திருப்பின் அப்பொருள் ______ மாற்றமடைந்து இருக்கும்.

(1) மீளா (2) வெப்ப உமிழ் (3) இயற்பியல் (4) கால ஒழுங்கற்ற

78. கூற்று 1: அனைத்து கால ஒழுங்கு மாற்றங்களும் விரும்பத்தக்க மாற்றங்களாகும்.

கூற்று 2: அனைத்து கால ஒழுங்கற்ற மாற்றங்களும் விரும்பத்தகா மாற்றங்களாகும்.

LIVEWORKSHEETS

கூற்று 3: அனைத்து வெப்பக்கொள் மாற்றங்களும் மீள் மாற்றங்களாகும்.

கூற்று 4: அனைத்து வேதி மாற்றங்களும் மீளா மாற்றங்களாகும்.

(1) அனைத்து கூற்றுகளும் சரி (2) அனைத்து கூற்றுகளும் தவறு

(3) கூற்று 4 மட்டும் சரி (4) கூற்று 1, 2 தவறு

79. தாவரங்கள் பகல் பொழுதில் ஒளிச்சேர்க்கையில் ஈடுபடுவதிலிருந்து சில வேதிவினைகள் நடைபெற ______ அவசியம் என்பது தெளிவாகிறது.

(1) ஒளி ஆற்றல் (2) வேதி ஆற்றல் (3) வெப்ப ஆற்றல் (4) வினைவேகமாற்றி

80. அடுமனைகளில் (Bakkery) ஈஸ்ட் பயன்படுத்தப்படுவதிலிருந்து சில வேதிவினைகள் நடைபெற ______ அவசியம் என்பதை அறியலாம்.

(1) ஒளி ஆற்றல் (2) வேதி ஆற்றல் (3) வெப்ப ஆற்றல் (4) வினைவேகமாற்றி

81. பின்வருவனவற்றுள் காற்று மாசுபாடு என்பது எதைக் குறிக்கிறது?

(1) காற்றில் ஆக்ஸிஜனின் அளவு அதிகரிப்பது.

(2) காற்றின் இயைபில் மாறுவது

(3) காற்றில் கார்பன் டை ஆக்ஸைடு அளவு அதிகரிப்பது.

(4) காற்றில் நைட்ரஜன் அளவு மாறுபடுவது.

82. தொடர்ந்து காற்றை மாசுபடுத்தும் வாயுக்கள் காற்றில் கலக்கும் பொழுது, அப்பகுதிகளில் ஆக்ஸிஜனின் சதவீதம் ______.

(1) குறையும் (2) அதிகரிக்கும்

(3) அதிகரித்து குறையும் (4) குறைந்து அதிகரிக்கும்

83. காற்றை மாசுபடுத்துவது எது?

(1) கார்பன் மோனாக்ஸைடு, மீத்தேன் (2) சல்ஃபர், நைட்ரஜன் ஆக்ஸைடுகள்

(3) குளோரோ ஃபுளூரோ கார்பன் (CFC) (4) அனைத்தும்

84. நீரை மாசுபடுத்துவது எது?

(1) வேதிப்பொருள்கள் நீரில் கலத்தல் (2) டிடர்ஜெண்டுகள் நீரில் கலத்தல்

(3) கச்சா எண்ணெய் நீரில் கலத்தல் (4) அனைத்தும்

85. பின்வரும் எந்த நிகழ்வுகளினால் நீர் பெருமளவு மாசடைகிறது?

(1) துணி துவைத்தல்

LIVEWORKSHEETS

(2) கால்நடைகளை குளிப்பாட்டுதல்

(3) எண்ணெய் கப்பல் விபத்துகளின் பொழுது கச்சா எண்ணெய் நீரில் கலத்தல்

(4) அனைத்தும்

86. நிலத்தை மாசுபடுத்துவது எது?

(1) யூரியா போன்ற வேதி உரங்கள் (2) பூச்சிக்கொல்லிகள்

(3) களைக்கொல்லிகள் (4) அனைத்தும்

87. செயற்கை வேதி உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் போன்றவற்றால்

(1) நன்மை அதிகம், தீமை குறைவு. (2) நன்மை குறைவு, தீமை அதிகம்.

(3) நன்மை, தீமை குறைவு. (4) நன்மை, தீமை அதிகம்

88. காற்று மாசுபாட்டால் ஏற்படும் விளைவு எது?

(1) அமிலமழை (2) புவி வெப்பமடைதல்

(3) சுவாசக் கோளாறுகள் (4) அனைத்தும்

89. நிலம், நீர், காற்று போன்ற இயற்கை வளங்கள் பெருமளவு மாசுபட தனது பெரும்பங்கை ஆற்றுபவர்

(1) தாவரங்கள் (2) விலங்குகள் (3) மனிதர்கள் (4) அனைத்தும்

90. மழைநீரில் நைட்ரஜன், சல்ஃபர் ஆக்ஸைடுகள் கரைந்து உருவாவது எது?

(1) அமில மழை (2) கார மழை (3) ஆலங்கட்டி மழை (4) அனைத்தும்

91. அமில மழை உருவாகக் காரணம் எது?

(1) தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் நச்சு வாயுக்கள் (2) எரிமலை வெடிப்பு

(3) $NO_2$, $SO_2$ (4) அனைத்தும்

92. பின்வருவனவற்றுள் அமில மழையின் விளைவு எது?

(1) விவசாய பாதிப்பு (2) கட்டடங்களின் அரிமானம்

(3) நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுவது (4) அனைத்தும்

93. அமில மழை உருவாவதைத் தடுக்கும் வழிமுறை எது?

(1) படிம எரிபொருள்களை குறைவாகப் பயன்படுத்துதல்

(2) தொழிற்சாலைக் கழிவுகளை சுத்திகரித்து வெளியேற்றுதல்

(3) செயற்கை உரங்களைக் கட்டுப்படுத்துதல்

(4) அனைத்தும்

LIVEWORKSHEETS

94. நீர் மாசுபாட்டால் ஏற்படும் விளைவு எது?

(1) நீரின் தரம் குறைதல் (2) தோல் நோய்கள்

(3) நீர்வாழ் உயிரினங்கள் பாதித்தல் (4) அனைத்தும்

95. நில மாசுபாட்டால் ஏற்படும் விளைவு எது?

(1) விவசாயம் பாதித்தல் (2) சுவாச நோய்

(3) புற்று நோய் (4) அனைத்தும்

96. _______ வேதிமாற்றம் அல்ல.

1) அமோனியா நீரில் கரைவது 2) கார்பன் டை ஆக்ஸைடு நீரில் கரைவது

3) துருவப் பனிக்குமிழ்கள் உருகுவது 4) உலர் பனிக்கட்டி நீரில் கரைவது

97. ஒப்புமை தருக.

இயற்பியல் மாற்றம் : கொதித்தல் :: வேதியியல் மாற்றம் : ?

1) எரிதல் 2) ஆவியாதல் 3) உருகுதல் 4) உறைதல்

98. கூற்று: பெட்ரோல் ஒரு துளியை உள்ளங்கையில் வைக்கும் பொழுது குளிர்ச்சியாக உணர்கிறோம்.

காரணம் : மேற்கூறிய நிகழ்வு வெப்பக்கொள் மாற்றமாகும்.

1) கூற்று சரி. காரணம் தவறு 2) கூற்று தவறு. காரணம் சரி

3) கூற்று மற்றும் காரணம் தவறு 4) கூற்று மற்றும் காரணம் சரி

99. கூற்று: திரவநிலை நீர் வெப்பப்படுத்துவதால் அதன் வாயு நிலைக்கு மாறுவது கொதித்தல் எனப்படும்.

காரணம்: நீர் ஒளி ஊடுருவும் பொருள்.

1) கூற்று சரி. காரணம் தவறு 2) கூற்று தவறு. காரணம் சரி

3) கூற்று மற்றும் காரணம் தவறு 4) கூற்று மற்றும் காரணம் சரி

100. கூற்று: பட்டாசு வெடித்தல் ஒரு இயற்பியல் மாற்றம்.

காரணம்: அனைத்து இயற்பியல் மாற்றங்களும் மீள் மாற்றங்களாகும்.

1) கூற்று சரி. காரணம் தவறு 2) கூற்று தவறு. காரணம் சரி

3) கூற்று மற்றும் காரணம் தவறு 4) கூற்று மற்றும் காரணம் சரி

101. கூற்று: மரக்கட்டையை எரித்து சாம்பலாக்குதல் ஒரு இயற்பியல் மாற்றம்.

காரணம்: எரிந்த சாம்பலை மீண்டும் மரக்கட்டையாக மாற்ற இயலும்.

LIVEWORKSHEETS

1) கூற்று சரி. காரணம் தவறு
2) கூற்று தவறு. காரணம் சரி
3) கூற்று மற்றும் காரணம் தவறு
4) கூற்று மற்றும் காரணம் சரி

102. வெட்டப்பட்ட ஆப்பிள் பழுப்பாக மாறுவதற்குக் காரணமான நிறமி _______.

1) நீரேறிய இரும்பு (II) ஆக்ஸைடு
2) ஸ்டார்ச்
3) மெலனின்
4) ஓசோன்

103. பிரைன் என்பது _______ ன் அடர்க் கரைசல் ஆகும்.

1) சோடியம் குளோரைடு
2) சோடியம் சல்ஃபைடு
3) சோடியம் புரோமைடு
4) கால்சியம் ஆக்ஸைடு

104. சுண்ணாம்புக்கல் _______ ஐ முதன்மையாகக் கொண்டுள்ளது.

1) சோடியம் குளோரைடு
2) சோடியம் சல்ஃபைடு
3) கால்சியம் கார்பனேட்
4) கால்சியம் ஆக்ஸைடு

105. கீழ்காண்பவற்றுள் எது மின்னாற் பகுப்பைத் தூண்டுகிறது?

1) மின்சாரம்
2) வெப்பம்
3) வினைவேகமாற்றி
4) ஒளி

LIVEWORKSHEETS